1978 மார்ச் 8]

நூல்களின் விலை.

* வினு 460—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைக்ளில், கூட்டுறவு, தனியார்துறை, அரசு எடுத்து நடத்தும் மில்களில் உற்பத்தி ஆகும் நூல்களின் விலைகளில் வித்தியாசமுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணமென்ன ?

(இ) 20, 40, 60 கவுண்ட் நூல்களின் விலை எவ்வளவு, 1975, 1976, 1977-ஆம் ஆண்டுகளில் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: விவரமான அறிக்கை* சட்டமன்ற பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த விவர அறிக்கையிலே பார்க்கக்கூடிய நேரத்திலே 75-ஆவது ஆண்டிற்கும், 77-வது ஆண்டு கடைசிக்கும் பார்க்கும்போது, 20, 40, 60 கவுண்டு நூல்களின் விலை 50 ரூபாய் வரையிலும் அதிகப்படியாக உயர்ந்திருக்கிறது. அதேபோன்று கூட்டுறவு நூற்பாலைகளின் நூலுக்கும், தனியார்துறையிலே உள்ள நூலுக்கும் உள்ள விலையைப் பார்க்கின்ற நேரத்தில் அதிக வித்தியாசம் இருக்கிறது. தேசீய நூற்பாலையின் நூல்கள் அதைவிட அதிகமாக இருப்பதற்கான காரணம் என்ன? ஒரே பகுதியில் உற்பத்தி செய்யக்கூடிய நூலை, இந்த அளவிற்கு வித்தியாசமான விலையிலே விற்பதற்கான அடிப்படைக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இணைப்பு I-ல் 75-ஆம் ஆண்டு, 76-ஆம் ஆண்டு, 77-ம் ஆண்டு வரையிலே உள்ள பல்வேறு வகையான நூல்களின் விலைப் பட்டியலை நாங்கள் இணைத்திருக்கிறோம். இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. கூட்டுறவு நூற்பாலைகளிலே அடக்க விலைக்கு நூல்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பதால் விலை குறைவாக இருக்கிறது. இதனால் பொதுச் சந்தையிலே விற்கப்படுகின்ற விலையைவிட, இது குறைந்த விலைக்கு விற்கப்படுவதைப் பார்க்கிறோம். சில நேரங்களில் இந்த விலை சற்று வேறுபடுமே தவிர, எப்போதும் கூட்டுறவு நூற்பாலைகளில் நூல்கள் அடக்க விலைக்கு விற்கப்படுகின்றது. அதனால்தான், தனியார் துறையிலே தயாரிக்கப்படுகின்ற நூலுக்கும், இதற்கும் இவ்வளவு வேறுபாடு இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*577-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1978 மார்ச் 8

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளிலேகூட இந்த விலை 1976 மார்ச் மாதத்திற்கும், 77-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கும் இடையிலே 20 நெம்பர் 28 ரூபாயும், 40 நெம்பர் 26 ரூபாயும், 60 நெம்பர் 43 ரூபாயும் விலை கூடியிருக்கிறதே, இப்படி கூட்டுறவுத் துறையிலேயே இருப்பதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கூட்டுறவுத் துறையிலே விலை வேறுபாடு இருப்பதற்குக் காரணம், அவ்வப்போது பருத்தியை நாம் விலைக்கு வாங்குகிறோம். அதைப் பொறுத்து இந்த விலை நிர்ணயிக்கப்படுகிறது. இன்றைக்கு மத்திய அரசு மல்டி பைபர் பாலிசியை அறிவித்ததற்குப் பின்னால், எம்.சி. 5 பருத்திக்குக் குறைந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பு அப்படி நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே தான், இந்த வேறுபாடுகள். மூலப்பொருள்கள் வாங்கக் கூடியதைப் பொறுத்து, அதற்கு என்ன விலை கொடுக்கப்படுகின்றதோ அதைப் பொறுத்து அடக்க விலையும் நிர்ணயம் செய்கிறோம். எனவேதான் இந்த வேறுபாடு வந்திருக்கிறது.

திரு. ரா. க. சு. தண்டபாணி : தலைவர் அவர்களே, இந்த துணைக் கேள்வி முன்பே தர வேண்டும். இது முந்திய கேள்விக்குச் சம்பந்தப்பட்டது. முந்திய கேள்வியின்போதே நான் கையைத் தூக்கினேன். ஆனால், தங்கள் கவனத்தை ஈர்க்கத் தவறி விட்டேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் துணைக் கேள்வியைப் போடுங்கள். தலைவர்மீது குறை சொல்ல வேண்டிய அவசியமில்லை. நீங்கள் கையைத் தூக்கினாலும், நேரத்தையும் கவனத்தில் கொண்டுதான் நான் கூப்பிட முடியுமே தவிர, கையைத்தூக்கினால் கூப்பிட வேண்டுமென்ற அவசியமில்லை. தயவுசெய்து கேள்வியைப் போடுங்கள்.

[முற்பகல் 10-20]

திரு. ரா. க. சு. தண்டபாணி : தலைவர் அவர்களே, நான் தான் தவறிவிட்டேன்.

இப்படி மூடப்பட்ட சிக் மில்களை தனியார் அரசோடு சேர்ந்து நடத்த முன்வந்தால் அரசு உதவ முன்வருமா ? மானேஜ்மென்ட் அதிகாரம் தனியார் வசம் ஒப்படைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலாவது கேள்விக்குச் சென்றிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இருந்தாலும் இந்த மன்றத்திற்குச் சில தகவல்களைத் தர வேண்டுமென்பதற்காக அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன்.

1978 மார்ச் 8]

இதற்கு முன்பு வரை தொழிலாளர்கள் உற்பத்தி, உற்பத்தித் திறன் ஆகியவை பற்றி ஆலோசனை வழங்கத்தக்க அளவுக்குத்தான் அவர்களுடைய ஆற்றலும், அனுபவமும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு நிர்வாகத்திலே அவர்கள் பங்கு பெற வேண்டுமென்று விரும்புகிறது. அப்படி அந்த ஆலையை மேற்கொண்டிருக்கும் நிர்வாகமும் தொழிலாளர்களும் சேர்ந்து அந்த ஆலையை நடத்தும் திட்டங்களோடு வந்தால் நிச்சயமாக இந்த அரசு தக்க உதவிகள் செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(2) தகவல் கோரல்,

அரசிதழ் பதிவில்லா ஊழியர்களின் வேலை நிறுத்தம் குறித்து.

திரு. என். சங்கரய்யா: பாயின்ட் ஆப் ஆர்டர். உங்கள் மூலமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு ஊழியர்கள் பிரச்சினை குறித்து வெகு சீக்கிரத்தில் அறிக்கை வெளியிடுவதாகக் கூறினார்கள். ஆனால்.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று காலையில்தான் நீங்கள் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். அதிலே நான் முடிவு எடுப்பதற்கு முன்னால் நீங்கள் எழுந்து அதைப் பற்றிப் பேசுவது என்றால் அது எப்படி அவையின் மரபுக்கு உட்பட்டதாகும்? தங்களுக்குத் தெரியாதது அல்ல. நீங்கள் கொடுத்ததை எல்லாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அதைப் பற்றி நான் கூறும் வரையில் பிரச்சினையை எழுப்பிப் பேசாமல் இருந்தால் நல்லது.

திரு. என். சங்கரய்யா: நான் அந்தத் தீர்மானத்தைப் பற்றிச் சொல்லப் போவதில்லை. நான் சொல்வது வேறு. அரசாங்கம் அன்றைக்கு ஒரு அறிவிப்புத் கொடுத்தது. 7–3–1978-ம் தேதி அவர்கள் அறிக்கையில் 'அரசு ஊழியர்கள் வேலைக்கு வரா விட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்' என்று கூறியிருக்கிறார்கள். இது பிரச்சினையைத் தீர்க்க உதவி